DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.C. 27/2021** |
| Deposition of Witness for | : | **P.W.8** |
| Name | : | **Dr. சக்தி அண்ணாமலை** |
| Father's Name | : | **மருத்துவர். சந்திரநாத்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி சிறையில் உள்ளார்.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 20.04.2026

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது மதுரை மாவட்டம் மேலூர் அரசு மருத்துவமனையில் முதுநிலை அரசு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2019 ம் வருடம் நான் இதே மருத்துவமனையில் உதவி அறுவை சிகிச்சை நிபுணராக 14.06.2019 ம் தேதி மாலை சுமார் 5.00 மணியளவில் நான் பணியில் இருந்தபோது சிவகங்கை மாவட்டம் கிளாதிரி கிராமத்தை சேர்ந்த வெள்ளைச்சாமி மகன் சங்கையா என்பவர் அன்றைய தினம் சுமார் 3.45 மணியளவில் தனது வீட்டு முன்பு வெடிகுண்டு வெடித்தாக இடது கால் முழுவதும் பலத்த ரத்தக்காயத்துடன் சிகிச்சைக்கு வந்திருந்தார். நான் அவருக்கு முதலுதவி செய்துவிட்டு மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன்.

2. அங்கு 14.06.2019 முதல் 15.08.2019 வரை சிகிச்சை பெற்று வந்தார். சங்கையாவிற்கு சிகிச்சை அளித்த மதுரை ராஜாஜி மருத்துவமனை மருத்துவர்கள் சங்கையாவிற்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையானது கொடுங்காயம் என சான்று அளித்தார். அதன்அடிப்படையில் நான் மேற்படி சங்கையாவிற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். நான் வழங்கிய **காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.2** ஆகும். மேற்படி நபருக்கு வெடிகுண்டு வெடித்ததால் அவருக்கு கொடுங்காயம் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

மேற்படி காயமானது பொதுவாக ஒரு நபர் இருசக்கரவாகனத்தில் வேகமாக செல்லும்போது பாலத்தில் உள்ள கம்பிகள் குத்தி ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் இல்லை. மேற்படி காயமானது தீ விபத்தினால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் அதிபயங்கரமான தீ விபத்தினால் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் சொல்லிக்கொடுத்தன் அடிப்படையில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.04.20 12:51:56 +05'30'

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**